வினாத் தொகுப்புக் குறியீடு :

பதிவு எண்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |

# 2019

# பொது அறிவு

அனுமதிக்கப்பட்டுள்ள நேரம் : 2 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 200

**வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்**

**முக்கிய அறிவுரைகள்**

1. இந்த வினாத் தொகுப்பு தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும்.
2. இந்த வினாத் தொகுப்பு **100** வினாக்களைக் கொண்டுள்ளது. விடையளிக்க தொடங்குமுன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும் இடையில் ஏதும் வெற்றுத்தாள்கள் உள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். **ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை பத்து நிமிடங்களுக்குள் அறைகண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத் தொகுப்பினை பெற்றுக் கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு, முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்பட மாட்டாது.**
3. **எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **எல்லா** வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
4. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத் தொகுப்பில் எழுதக் கூடாது.
5. விடைகளை குறித்து காட்ட என, விடைத்தாள் ஒன்று உங்களுக்கு அறைக் கண்காணிப்பாளரால் தரப்படும்.
6. உங்களுடைய வினாத்தொகுப்பு குறியீட்டை (Question Booklet Code) விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். மேற்கண்டவற்றை விடைத்தாளில் நீங்கள் குறித்துக் காட்டத் தவறினால் தேர்வாணைய அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
7. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு விடைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் அவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு கேள்விக்கு இருப்பதாகக் கருதினால் நீங்கள் மிகச் சரியானது என்று எதைக் கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். எப்படியாயினும் ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். உங்களுடைய மொத்த மதிப்பெண்கள் நீங்கள் விடைத்தாளில் குறித்துக் காட்டும் சரியான விடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது.
8. விடைத்தாளில் ஒவ்வொரு கேள்வி எண்ணிற்கும் எதிரில் Ⓐ, Ⓑ, Ⓒ மற்றும் Ⓓ என நான்கு வட்டங்கள் உள்ளன. ஒரு கேள்விக்கு விடையளிக்க நீங்கள் சரியென கருதும் விடையை ஒரே ஒரு வட்டத்தில் மட்டும் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்து முனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் குறிக்க வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால் அந்த விடை தவறானதாகக் கருதப்படும். உதாரணமாக நீங்கள் Ⓑ என்பதை சரியான விடையாகக் கருதினால் அதை பின்வருமாறு குறித்துக் காட்ட வேண்டும்.

   Ⓐ ● Ⓒ Ⓓ

9. நீங்கள் வினாத் தொகுப்பின் எந்தப் பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வுக் கூடத்தை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்து விட வேண்டும். இவ்வினாத் தொகுப்பினைத் தேர்வு முடிந்தவுடன் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.
10. **குறிப்புகள் எழுதிப் பார்ப்பதற்கு வினாத் தொகுப்பின் கடைசிப் பக்கத்திற்கு முன் உள்ள பக்கத்தை உபயோகித்துக் கொள்ளலாம். இதைத் தவிர, வினாத் தொகுப்பின் எந்த இடத்திலும் எந்த வித குறிப்புகளையும் செய்யக்கூடாது. இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும்.**
11. ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள் தான் முடிவானதாகும்.
12. விண்ணப்பதாரர்கள் விடையளிக்காமல் உள்ள வினாக்களின் மொத்த எண்ணிக்கையை விடைத்தாளின் பக்கம் 2-ல் அதற்கென உரிய கட்டத்தில் எழுதி நிரப்பவும். இதற்கென கூடுதலாக ஐந்து நிமிடங்கள் வழங்கப்படும்.
13. மேற்கண்ட அறிவுரைகளில் எதையாவது மீறினால் தேர்வாணையம் முடிவெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

SEE BACKSIDE OF THIS BOOKLET FOR ENGLISH VERSION OF INSTRUCTIONS

SEAL

1. The BCD equivalent of $(27)_{10}$

(A) 0011 0101 (B) 0010 0111

(C) 0001 1010 (D) 0010 0101

$(27)_{10}$ என்ற பத்தடிமான எண்ணின் BCD வடிவம்

(A) 0011 0101 (B) 0010 0111

(C) 0001 1010 (D) 0010 0101

2. Who was known as the 'Morning Star' of India?

(A) Raja Ram Mohan Rai

(B) Mahatma Gandhi

(C) Rabindranath Tagore

(D) Subash Chandra Bose

'இந்தியாவின் விடிவெள்ளி' என்று அழைக்கப்படுபவர் யார்?

(A) இராஜா ராம் மோகன் ராய்

(B) மகாத்மா காந்தி

(C) இரபிந்திரநாத் தாகூர்

(D) சுபாஷ் சந்திர போஸ்

3. 'The Bombay presidency Association' was started in ————

(A) 1885 A.D. (B) 1882 A.D.

(C) 1883 A.D. (D) 1880 A.D.

'தி பாம்பே பிரஸிடென்ஸி அசோஷியேசன்' தொடங்கப்பட்ட ஆண்டு எது?

(A) 1885 A.D. (B) 1882 A.D.

(C) 1883 A.D. (D) 1880 A.D.

4. Name the Marathi weekly, started by B.R. Ambedkar in 1930

(A) Samaj (B) Samata

(C) Janata (D) Bharat

1930-ம் ஆண்டு பி.ஆர். அம்பேத்கர் தொடங்கிய வாரப்பத்திரிக்கையின் பெயர் என்ன?

(A) சமாஜ் (B) சமதா

(C) ஜனதா (D) பாரதம்

5. Who founded the Indian Reform Association in 1870?

(A) Ram Mohan Roy

(B) Debendranath Tagore

(C) Keshab Chandra Sen

(D) Ishwar Chandra Vidhyasagar

இந்திய சீர்திருத்த சங்கத்தை 1870–ல் நிறுவியவர் யார்?

(A) ராம் மோகன் ராய்

(B) தேபேந்திரநாத் தாகூர்

(C) கேசப் சந்திர சென்

(D) ஈஸ்வர் சந்திர வித்யாசாகர்

6. Who passed the 'Widow Remarriage Act' of 1856

(A) Lord Dal housie (B) Lord Canning

(C) Lord Wellesly (D) Warren Hastings

1856–ஆம் ஆண்டு விதவை மறுமண சட்டத்தைக் கொண்டு வந்தவர் யார்?

(A) டல்ஹௌசி பிரபு (B) கேனிங் பிரபு

(C) வெல்லஸ்லி பிரபு (D) வாரன் ஹேஸ்டிங்ஸ்

7. Who was the author of 'Kavyadarsa'?

(A) Visakadatta (B) Kalidasa

(C) Dandin (D) Bharavi

"காவ்ய தரிசனம்" என்ற நூலின் ஆசிரியர் யார்?

(A) விசாகதத்தர் (B) காளிதாசர்

(C) தண்டின் (D) பாரவி

8. Who among the following was the founder of the Turkish Dominion in India?

(A) Qutub-ud-Din Aibak (B) Iltumish

(C) Balban (D) Ghiyas-ud-Din Mahmud

கீழ்க் காண்பவர்களுள், துருக்கிய ஆதிக்கத்தை இந்தியாவில் தோற்றுவித்தவர் யார்?

(A) குத்புதீன் ஐபக் (B) இல்டுமிஷ்

(C) பால்பன் (D) கியாசுதீன் முகம்மது

9. What was the period of the Mesolithic Age?

(A) 10000 BC to 4000 BC

(B) 9000 BC to 4000 BC

(C) 8000 BC to 4000 BC

(D) 7000 BC to 4000 BC

இடை கற்காலத்தின் காலம் எது?

(A) கி.மு. 10000 முதல் கி.மு. 4000 வரை

(B) கி.மு. 9000 முதல் கி.மு. 4000 வரை

(C) கி.மு. 8000 முதல் கி.மு. 4000 வரை

(D) கி.மு. 7000 முதல் கி.மு. 4000 வரை

10. Reduced leaves and Sunken Stomata are the characteristic features of

(A) Epiphytes

(B) Hydrophytes

(C) Mesophytes

(D) Xerophytes

ஒடுக்கப்பட்ட இலைகள் மற்றும் மறைவிட இலைத்துளைகள் எவற்றின் குணாதிசயப் பண்புகளாகும்.

(A) தொற்றுத் தாவரங்கள்

(B) நீர்வாழ்த் தாவரங்கள்

(C) இடைநிலைத் தாவரங்கள்

(D) வறள் நிலத் தாவரங்கள்

11. The human erythrocytes contain adequate amount of ———— enzyme

(A) Carbonic kinase

(B) Carbonic amylase

(C) Carbonic ligase

(D) Carbonic an hydrase

மனித இரத்த சிவப்பு அணுக்களில் போதுமான அளவு ———— நொதி உள்ளது

(A) கார்பானிக் கினேஸ்

(B) கார்பானிக் அமிலேஸ்

(C) கார்பானிக் லிகேஸ்

(D) கார்பானிக் அன் ஹைட்ரேஸ்

12. Structural unit of a gene is called as

(A) Cistron

(B) Recon

(C) Muton

(D) Codon

ஜீனின் அமைப்பு அலகு என்பது

(A) சிஸ்ட்ரான்

(B) ரீக்கான்

(C) மியூட்டான்

(D) கோடான்

13. The raw material used for the manufacture of Rayon is

(A) Coal
(B) Cellulose
(C) Plastic
(D) Petroleum

ரேயான் தயாரிக்கப் பயன்படும் மூலப்பொருள்

(A) நிலக்கரி
(B) செல்லுலோஸ்
(C) பிளாஸ்டிக்
(D) பெட்ரோலியம்

14. Which organic functional group forms the peptide bond of proteins?

(A) ether
(B) ester
(C) acetal
(D) amide

புரதத்தில் உள்ள பெப்டைடு பிணைப்பினை உருவாக்கும் கரிம வினைத் தொகுதி எது?

(A) ஈதர்
(B) எஸ்டர்
(C) அசிட்டால்
(D) அமைடு

15. The pH of 0.1 M NaOH is

(A) 1
(B) 0.1
(C) 14
(D) 13

0.1 M NaOH - ன் pH மதிப்பு

(A) 1
(B) 0.1
(C) 14
(D) 13

16. The river which originates from the glacier located to the east of the Manasarovar lake is

(A) Ganga (B) Yamuna

(C) Brahmaputra (D) Indus

மானசரோவர் ஏரிக்கு கிழக்கே அமைந்துள்ள பனியாற்றிலிருந்து தோன்றும் நதி

(A) கங்கை (B) யமுனா

(C) பிரம்மபுத்திரா (D) சிந்து

17. Bird – Foot delta is best formed by

(A) Mississipi (B) Ganga

(C) Amazon (D) Nile

பறவைப் பாத டெல்டாவிற்க்கு மிகச் சிறந்த உதாரணம் எது?

(A) மிசிசிபி (B) கங்கை

(C) அமேசான் (D) நைல்

18. Black soil is also known as

(A) Khadhar (B) Kankar

(C) Regur (D) Red

கரிசல் மண் எனப்படுவது.

(A) காதர் (B) கங்கர்

(C) ரீகர் (D) சிவப்பு

19. As per 2011 census, the population of India is

(A) 646 million
(B) 745 million
(C) 1210 million
(D) 1029 million

2011- ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்திய மக்கள் தொகை அளவு என்ன?

(A) 646 மில்லியன்
(B) 745 மில்லியன்
(C) 1210 மில்லியன்
(D) 1029 மில்லியன்

20. Find the incorrect statement (s) from the following

(i) Owing to the over population, the per capita availability of water is going up.

(ii) Due to growing population, the per capita availability of water is going down.

(iii) Urbanisation and Industrialisation are the causes for deteriorating. water reservoirs quality.

(iv) Urbanisation and Industrialisation are not the causes for deteriorating. water reservoirs quality.

(A) (i) and (iv) only
(B) (i) and (iii) only
(C) (ii) and (iii) only
(D) (ii) and (iv) only

பின்வருவனவற்றுள் தவறான கூற்றுகளைக் காண்க.

(i) மிகை மக்கள் தொகையின் காரணமாக கிடைக்கக்கூடிய தலா நீரினளவு கூடும்.

(ii) மக்கட் தொகைப் பெருக்கத்தின் காரணமாக கிடைக்கக்கூடிய தலை வீத தண்ணீரினளவு குறையும்.

(iii) நீர் நிலைகளின் தரக்குறைவிற்கு நகர்மயமாதலும் தொழில்மயமாதலும் காரணமாகும்.

(iv) நீர் நிலைகளின் தரக்குறைபாட்டிற்கு நகர்மயமாதலும் தொழில்மயமாதலும் காரணமல்ல.

(A) (i) மற்றும் (iv) மட்டும்
(B) (i) மற்றும் (iii) மட்டும்
(C) (ii) மற்றும் (iii) மட்டும்
(D) (ii) மற்றும் (iv) மட்டும்

21. Which one of the following is a primary function of money?
(A) Money is a measure of value
(B) Money acts as a store of value
(C) Money helps to transfer values
(D) Money facilitates the distribution of national income

பின்வருவனவற்றுள் எந்த ஒன்று பணத்தின் முதன்மையான பணி ஆகும்?
(A) மதிப்பினை அளவிடும் அளவுகோல்
(B) மதிப்பினை சேமிக்க உதவுகிறது
(C) மதிப்புகளை மாற்ற உதவுகிறது
(D) தேசிய வருவாய் பகிர்வில் உதவுகிறது

22. Name of the award given for outstanding performance in sports over a period of 4 years.
(A) Dhayan chand Award
(B) Drono Charya Award
(C) Rajiv Gandhi Khel Ratna Award
(D) Arjuna Award

பின்வருவனவற்றுள் நான்கு ஆண்டுகள் விளையாட்டு துறையில் சாதிக்கும் வீரர்களுக்கு வழங்கப்படும் விருது எது?
(A) தயான் சந்த் விருது
(B) துரோணச் சாரியார் விருது
(C) ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருது
(D) அர்ஜுனா விருது

23. When do India celebrate 'Kargil Vijay Diwas' annually?
(A) $24^{th}$ July
(B) $25^{th}$ July
(C) $26^{th}$ July
(D) $27^{th}$ July

கார்கில் விஜய் டயாவாஸ் நாள் என்று கொண்டாடப்படுகிறது?
(A) 24 ஜூலை
(B) 25 ஜூலை
(C) 26 ஜூலை
(D) 27 ஜூலை

24. How was Harappan archaeological site damaged in 1857?

(A) Earthquake

(B) Land slide

(C) Flood

(D) Used as track ballast for building railway line

1857–ல் ஹரப்பா தொல்பொருள் சிதிலமடையக் காரணம் என்ன?

(A) நில நடுக்கம்

(B) நில சரிவு

(C) வெள்ளம்

(D) ரயில் பாதையை அமைக்க இங்குள்ள கற்கள் பயன்படுத்தப்பட்டன

25. What is the meaning of 'Free cycle'?

(A) A cycle given as free

(B) A ride given as free in a cycle

(C) Give away something that are used and unwanted as opposed to selling

(D) None of these

'Free cycle' என்பதன் பொருள் யாது?

(A) இலவச மிதிவண்டி

(B) இலவசமாக மிதிவண்டியில் சுற்றுவது

(C) பயன்படுத்திய பொருளை விற்காமல் அதனை பிறருக்கு கொடுப்பது

(D) மேற்கூறிய ஏதுமில்லை

26. What is the chemical name of sand?

(A) Sodium chloride (B) Nitric oxide

(C) Silicon dioxide (D) Sodium oxide

மணலின் வேதியியல் பெயர் என்ன?

(A) சோடியம் குளோரைடு (B) நைட்ரிக் ஆக்ஸைடு

(C) சிலிக்கான் டைஆக்ஸைடு (D) சோடியம் ஆக்ஸைடு

27. What is AskDisha?

(A) Name of a person
(B) Name of a place
(C) Name of a Machine
(D) Name of a chatbot

ஆஸ்க்டிஷா என்றால் என்ன?

(A) மனிதனின் பெயர்
(B) இடத்தின் பெயர்
(C) எந்திரத்தின் பெயர்
(D) உரையாடும் மென்பொருளின் பெயர்

28. Which state rebelled against India under A.Z.Phizo?

(A) Mizoram
(B) Nagaland
(C) Sikkim
(D) Meghalaya

A.Z. பிஷோ தலைமையில் எந்த மாநிலம் இந்தியாவிற்கு எதிராக போராடியது?

(A) மிசோரம்
(B) நாகாலாந்து
(C) சிக்கிம்
(D) மேகாலயா

29. Who was the first chairman of Atomic Energy Commission of India?

(A) Vikram Sarabhai
(B) Homi J. Bhaba
(C) Abdul kalam
(D) Kasturi Rangan

இந்திய அணு சக்தி கழகத்தின் முதல் தலைவர் யார்?

(A) விக்ரம் சாராபாய்
(B) ஹோமி J. பாபா
(C) அப்துல் கலாம்
(D) கஸ்தூரி ரங்கன்

30. Arrange the Nobel laurates **chronologically**

I. Mother Teresa

II. Amartyasen

III. Hargobind Khurana

IV. Chandrasekar

(A) II, III, IV, I (B) IV, II, I, III

(C) III, I, IV, II (D) I, II, III, IV

நோபல் பரிசு பெற்றவர்களை கால வரிசைப்படி வரிசைப்படுத்தவும்.

I. அன்னை தெரசா

II. அமர்த்தியா சென்

III. ஹர்கோபின்ந் குரானா

IV. சந்திரசேகர்

(A) II, III, IV, I (B) IV, II, I, III

(C) III, I, IV, II (D) I, II, III, IV

31. Which Indian film won maximum awards at Oscars in 2013?

(A) Slumdog Millionairre (B) Dangal

(C) Life of Pi (D) PK

எந்த இந்திய திரைப்படம் 2013ம் ஆண்டில் பல ஆஸ்கார் விருதுகளை பெற்றது?

(A) ஸ்லம்டாக் மில்லியனர் (B) டங்கல்

(C) லைப் ஆஃப் பை (D) பிகே

32. The least number which when divided by 16, 18 and 21 leaves the remainders 3, 5 and 8 respectively is

(A) 893 (B) 992

(C) 995 (D) 1024

16, 18 மற்றும் 21 ஆகிய எண்களை வகுக்கும் போது மீதி முறையே 3, 5 மற்றும் 8 தருகின்ற மிகச் சிறிய எண்

(A) 893 (B) 992

(C) 995 (D) 1024

33. Find the next term in the series :

DF, GJ, KM, NQ, RT?

(A) UW (B) UX

(C) XZ (D) YZ

வரிசையின் அடுத்த உறுப்பைக் காண்க.

DF, GJ, KM, NQ, RT?

(A) UW (B) UX

(C) XZ (D) YZ

34. If $y$% of x is 50 and $z$% of y is 25 then the relation between $x$ and $z$

(A) $x = 2z$ (B) $z = 2x$

(C) $x = 4z$ (D) $z = 4x$

$x$ ன் $y$ சதவீதம் 50 எனவும் $y$ ன் $z$ சதவீதம் 25 எனில் $x$ க்கும் $z$ க்கும் உள்ள தொடர்பு

(A) $x = 2z$ (B) $z = 2x$

(C) $x = 4z$ (D) $z = 4x$

35. Find the LCM of $12(x-1)^3$ and $15(x-1)(x+2)^2$

(A) $40(x-1)^3(x+2)^2$ (B) $60(x-1)^2(x+2)^3$

(C) $60(x-1)^3(x+2)^2$ (D) $40(x-1)^3(x+2)^3$

$12(x-1)^3$ மற்றும் $15(x-1)(x+2)^2$ -ன் மீ.பொ.ம

(A) $40(x-1)^3(x+2)^2$ (B) $60(x-1)^2(x+2)^3$

(C) $60(x-1)^3(x+2)^2$ (D) $40(x-1)^3(x+2)^3$

36. Simple interest on a certain sum is $\frac{16}{25}$ of the sum. The rate percent, if the rate percent and time (in years) are equal, is

(A) 6% (B) 8%

(C) 10% (D) 12%

ஒரு தொகைக்கான தனிவட்டியானது அத்தொகையின் $\frac{16}{25}$ மடங்காக உள்ளது, மேலும் வட்டியானது கால அளவிற்கு சமமாக இருந்தால் அந்த வட்டி எவ்வளவு?

(A) 6% (B) 8%

(C) 10% (D) 12%

37. The compound interest on Rs.30,000 at 7% per annum is Rs.4,347. The period (yrs) is

(A) 2 (B) $2\frac{1}{2}$

(C) 3 (D) 4

ரூபாய் 30,000 க்கு 7% ஆண்டுக்கு கிடைக்கும் தொகை கூட்டு வட்டியில் ரூ. 4,347 என்றால் மொத்த ஆண்டு எவ்வளவு?

(A) 2 (B) $2\frac{1}{2}$

(C) 3 (D) 4

38. Find the wrong number in the series 69, 55, 26, 13, 5

(A) 5 (B) 13

(C) 26 (D) 55

69, 55, 26, 13, 5 என்ற வரிசையின் தவறான எண்ணைக் காண்க

(A) 5 (B) 13

(C) 26 (D) 55

39. If $m$ and $n$ are two numbers, then their LCM is ———— (Let HCF $(m, n)$ = HCF).

(A) $\frac{mn}{\text{HCF}}$ (B) $\frac{mn}{\text{LCM}}$

(C) $\frac{m+n}{\text{HCF}}$ (D) $\frac{m-n}{\text{HCF}}$

$m$ மற்றும் $n$ என்பன இரண்டு எண்கள் எனில் அவற்றின் LCM ———— (HCF $(m, n)$ = HCF என்க).

(A) $\frac{mn}{\text{HCF}}$ (B) $\frac{mn}{\text{LCM}}$

(C) $\frac{m+n}{\text{HCF}}$ (D) $\frac{m-n}{\text{HCF}}$

40. The HCF of 598 and 874 is

(A) 46 (B) 41

(C) 43 (D) 36

598 மற்றும் 874ன் மீப்பெரு பொது வகு எண் யாது?

(A) 46 (B) 41

(C) 43 (D) 36

41. The rate percent per annum, when a principal of ₹ 7,000 earns a simple interest ₹ 1,680 in 16 months is

(A) 8%
(B) 18%
(C) 16%
(D) 15%

16 மாதங்களுக்கு முதலீடு செய்யப்பட்ட அசல் ₹ 7,000 –க்கு பெறப்பட்ட வருடாந்திர சாதாரண வட்டித்தொகை ₹ 1,680 எனில், ஆண்டு வட்டி சதவீதம் என்பது

(A) 8%
(B) 18%
(C) 16%
(D) 15%

42. Which one of the following prepositional logic formula is true when exactly two of $p, q$ and $r$ are true?

(A) $[(p \leftrightarrow q) \wedge r] \vee [p \wedge q \wedge \sim r]$
(B) $[\sim (p \leftrightarrow q) \wedge r] \vee [p \wedge q \wedge \sim r]$
(C) $[(p \rightarrow q) \wedge r] \vee [p \wedge q \wedge \sim r]$
(D) $[\sim (p \rightarrow q) \wedge r] \vee [p \wedge q \wedge \sim r]$

$p, q$ மற்றும் $r$ ஆகியவற்றில் சரியாக ஏதேனும் இரண்டு உண்மையெனில், கீழ்க்கண்ட கூற்றில் எது உண்மை?

(A) $[(p \leftrightarrow q) \wedge r] \vee [p \wedge q \wedge \sim r]$
(B) $[\sim (p \leftrightarrow q) \wedge r] \vee [p \wedge q \wedge \sim r]$
(C) $[(p \rightarrow q) \wedge r] \vee [p \wedge q \wedge \sim r]$
(D) $[\sim (p \rightarrow q) \wedge r] \vee [p \wedge q \wedge \sim r]$

43. The value of $\left(\frac{9.6 \times 9.6 \times 9.6 - 5.4 \times 5.4 \times 5.4}{9.6 \times 9.6 + 9.6 \times 5.4 + 5.4 \times 5.4}\right)$ is

(A) 5.1
(B) 4.6
(C) 4.2
(D) 15

$\left(\frac{9.6 \times 9.6 \times 9.6 - 5.4 \times 5.4 \times 5.4}{9.6 \times 9.6 + 9.6 \times 5.4 + 5.4 \times 5.4}\right)$ ன் மதிப்பானது

(A) 5.1
(B) 4.6
(C) 4.2
(D) 15

44. In the year 1998 which one of the following committee was established?

(A) Vohra Committee
(B) Dinesh Goswami Committee
(C) Indrajit Gupta Committee
(D) Tankha Committee

கீழ்கண்டவற்றில் எந்த கமிட்டி 1998 –ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது?

(A) வோரா கமிட்டி
(B) தினேஷ் கோஸ்வாமி கமிட்டி
(C) இந்திரஜித் குப்தா கமிட்டி
(D) தான்கா கமிட்டி

45. Which one of the following committees recommended constitutional status for Panchayats?

(A) G.V.K. Rao Committee
(B) Ashok Mehta Committee
(C) L.M. Singhvi Committee
(D) Lalit Mathur Committee

கீழ்க்கண்ட குழுக்களில் பஞ்சாயத்துகளுக்கு அரசியலமைப்பு அடிப்படையிலான நிலையினை வழங்குமாறு பரிந்துரைத்த குழு எது?

(A) G.V.K. ராவ் குழு
(B) அசோக் மேத்தா குழு
(C) L.M. சிங்வி குழு
(D) லலித் மாத்தூர் குழு

46. The Comptroller and Auditor general of India submits his audit reports to the :

(A) Union parliament
(B) The President of India
(C) The Vice–president of India
(D) The Prime minister of India

இந்தியாவின் தலைமை மற்றும் தணிக்கை அதிகாரி தனது தணிக்கை அறிக்கையை சமர்பிப்பது :

(A) மத்திய பாராளுமன்றம்
(B) இந்திய ஜனாதிபதி
(C) இந்திய துணை ஜனாதிபதி
(D) இந்திய பிரதமர்

47. The Inter–State council was established in the year

(A) 1988 (B) 1989

(C) 1990 (D) 1991

மாநிலங்களுக்கிடையேயான குழு ஏற்படுத்தப்பட்ட ஆண்டு

(A) 1988 (B) 1989

(C) 1990 (D) 1991

48. Which one of the following States does not have a legislative council?

(A) Bihar (B) Jammu and Kashmir

(C) Uttar Pradesh (D) Madhya Pradesh

கீழ்க்கண்டவற்றில் சட்டமன்ற மேலவை இல்லாத மாநிலம் எது?

(A) பீகார் (B) ஜம்மு மற்றும் காஷ்மீர்

(C) உத்திரப் பிரதேசம் (D) மத்தியப் பிரதேசம்

49. Consider the following statements on Lok Adalat :

1. Award made by Lok Adalat is deemed to be a decree of a civil court and no appeal lies against there to before any court.
2. Family disputes are not covered
3. Relating to civil/criminal offence not compountable to any law, Lok Adalat can not decide

(A) Only 1 (B) 1 and 3

(C) 2 and 3 (D) 1, 2 and 3

லோக் அதலாத்தின் சரியான வாக்கியத்தை தேர்வு செய்க.

1. லோக் அதலாத் ஒரு உரிமையியல் கோர்ட்டுக்கு சமமானது, லோக் அதலாத்தின் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யயியலாது.
2. குடும்ப சண்டைகள் லோக் அதலாத்தின் ஆள்வரைக்குள்வராது
3. குடிமை மற்றும் குற்றவியல் தப்புக்களை தீர்வு செய்ய லோக் அதலாத்திற்கு ஆள்வரைகிடையாது.

(A) 1 மட்டும் (B) 1 மற்றும் 3

(C) 2 மற்றும் 3 (D) 1, 2 மற்றும் 3

50. Sudden fall in barometer reading is the indication of

(A) earth quake (B) rain

(C) storm (D) clear weather

பாராமானி அளவீடு திடீரென குறைவது எதை காட்டுகிறது

(A) நில நடுக்கம் (B) மழை

(C) புயல் (D) தெளிவான வானிலை

51. A metal wire of resistance 5Ω was connected to a battery of 10V. Then the current through the wire and the power spent on the wire are

(A) 0.5 A, 5 W (B) 2.0 A, 20 W

(C) 5 A, 0.5 W (D) 20 A, 2.0 W

5Ω மின்தடை கொண்ட உலோகக் கம்பியொன்று 10V மின்னியக்கு விசை கொண்ட மின்கலத்துடன் இணைக்கப்பட்டுள்ளது எனில், கம்பியில் பாயும் மின்னோட்டம் மற்றும் கம்பியில் செலவழிக்கப்பட்ட திறன்

(A) 0.5 A, 5 W (B) 2.0 A, 20 W

(C) 5 A, 0.5 W (D) 20 A, 2.0 W

52. A doctor prescribes spectacles to a patient with a combination of a convex lens of focal length 40 cm, and concave lens of focal length 25 cm, then the power of spectacles will be

(A) – 6.5 D (B) 1.5 D

(C) – 1.5 D (D) – 8.5 D

ஒரு கண் மருத்துவர் நோயாளி ஒருவருக்கு 40 செ.மீ குவியத் தொலைவுள்ள குவிலென்சையும் 25 செ.மீ குவியத் தொலைவுள்ள குழிலென்சையும் இணைத்து மூக்கு கண்ணாடி அணிய பரிந்துரைக்கிறார். அந்த மூக்கு கண்ணாடியின் திறன் என்ன?

(A) – 6.5 D (B) 1.5 D

(C) – 1.5 D (D) – 8.5 D

53. 'The Indian Independence League' was formed in

(A) India (B) Tokyo

(C) Bombay (D) Madras

'இந்திய சுதந்திரக் கட்சி' எங்கு தொடங்கப்பட்டது?

(A) இந்தியா (B) டோக்கியோ

(C) பம்பாய் (D) மெட்ராஸ்

54. Name the book written by Lala Lajpat Rai

(A) Un happy India (B) Discovery of India

(C) Gitanjali (D) Maharatta

லாலா லஜ்பதி ராயால் எழுதப்பட்ட நூலின் பெயர் என்ன?

(A) அன் ஹேப்பி இந்தியா (B) டிஸ்கவரி ஆப் இந்தியா

(C) கீதாஞ்சலி (D) மஹாராட்டம்

55. In which year and where did the All – India Khilafat conference held?

(A) Delhi – 1919 A.D.

(B) Bombay – 1920 A.D.

(C) Calcutta – 1919 A.D.

(D) Madras – 1920 A.D.

'அனைத்திந்திய கிலாபத் மாநாடு' எந்த ஆண்டு, எங்கு நடைபெற்றது?

(A) டெல்லி – 1919 A.D.

(B) பம்பாய் – 1920 A.D.

(C) கல்கத்தா – 1919 A.D.

(D) மெட்ராஸ் – 1920 A.D.

56. Which of the following Sikh Guru was killed by Aurangzeb?

(A) Guru Nanak (B) Guru Arjun

(C) Guru Hargovind (D) Guru Tegh Bahadur

கீழ்கண்ட சீக்கிய குருக்களில் அவுரங்கசீப்பினால் 'கொலைத் தண்டனை' விதிக்கப்பட்டவர் யார்?

(A) குரு நானக் (B) குரு அர்ஜீன்

(C) குரு ஹர்கோவிந்த் (D) குரு தேக் பகதூர்

57. Who founded the Rama Krishna Mission in 1897?

(A) Rama Krishna Paramahamsar

(B) Dayanand Saraswati

(C) Vivekanandar

(D) Sri Aurobindo

1897 ஆம் ஆண்டு இராமகிருஷ்ணா மிஷனை தோற்றுவித்தவர் யார்?

(A) இராமகிருஷ்ண பரமஹம்சர்

(B) தயானந்த சரஸ்வதி

(C) விவேகானந்தர்

(D) ஸ்ரீ அரவிந்தர்

58. Who was the first Gupta ruler to issue silver coins?

(A) Chandragupta – I (B) Chandragupta – II

(C) Samudragupta (D) Srigupta

முதன் முதலில் வெள்ளி நாணயத்தை வெளியிட்ட குப்த அரசர் யார்?

(A) முதலாம் சந்திர குப்தர் (B) இரண்டாம் சந்திர குப்தர்

(C) சமுத்திர குப்தர் (D) ஸ்ரீகுப்தர்

59. Alkaloids are a group of toxic wastes products, but some are useful to us. Match the useful alkaloids and their sources :

| | | | |
|---|---|---|---|
| (a) | Quinine | 1. | Opium |
| (b) | Morphine | 2. | Tobacco |
| (c) | Tropine | 3. | Cinchona |
| (d) | Nicotine | 4. | Withania |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 2 | 4 | 1 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 1 | 3 | 4 | 2 |

ஆல்கலாய்டுகள் என்பவை நச்சுக் கழிவுப் பொருட்களாகும் ஆனால் அவைகளில் சில நமக்குப் பயன்படுகிறது. பயன்படும் ஆல்கலாய்டுகளையும் அவற்றின் ஆதாரங்களையும் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | குயினைன் | 1. | ஓபியம் |
| (b) | மார்ஃபின் | 2. | புகையிலை |
| (c) | ட்ரோபின் | 3. | சின்கோனா |
| (d) | நிகோடின் | 4. | அமுக்கரா |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 2 | 4 | 1 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 1 | 3 | 4 | 2 |

60. In DNA, nitrogenous base together with a deoxyribose sugar and a phosphate group forms a

(A) Nucleoside
(B) Nucleotide
(C) Protein
(D) Amino acid

நைட்ரஜன் காரமானது, டி ஆக்ஸிரிபோஸ் சர்க்கரை மற்றும் பாஸ்பேட் தொகுதியுடன் சேர்ந்து DNA வில் உருவாவது

(A) நியூக்ளியோஸைடு
(B) நியூக்ளியோடைடு
(C) புரதம்
(D) அமினோ அமிலம்

61. Which group of vertebrates comprises Highest number of endangered species?

(A) Fishes (B) Mammals

(C) Reptiles (D) Birds

அழியும் தருவாயிலுள்ள முதுகெலும்பிகள் அதிக எண்ணிக்கையில் எந்த தொகுதியில் காணப்படுகிறது?

(A) மீன்கள் (B) பாலூட்டிகள்

(C) ஊர்வன (D) பறப்பன

62. Which one of the following drug is called 'superman' drug?

(A) Cocaine (B) Amphetamine

(C) Heroin (D) Alcohol

கீழ்காண்பவற்றில் எது "சூப்பர்மேன்" எனப்படும் மயக்க மூட்டும் மருந்து?

(A) கோகெய்ன் (B) ஆம்ஃபிடமைன்

(C) ஹெராயின் (D) ஆல்கஹால்

63. The oxidation state of carbon atom in $C_3O_2$ molecule is

(A) 0 (B) +2

(C) +2/3 (D) +4/3

$C_3O_2$ என்ற மூலக்கூறில் கார்பன் அணுவின் ஆக்சிஜனேற்ற எண்

(A) 0 (B) +2

(C) +2/3 (D) +4/3

64. Match the following:

| | Mountain Pass | | State |
|---|---|---|---|
| (a) | Bum la | 1. | Sikkim |
| (b) | Khardungla | 2. | Jammu and Kashmir |
| (c) | Nathu la | 3. | Himachal Pradesh |
| (d) | Shipki la | 4. | Arunachal Pradesh |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 2 | 4 | 3 | 1 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

பொருத்துக

| | மலை கணவாய் | | மாநிலம் |
|---|---|---|---|
| (a) | பூம் லா | 1. | சிக்கிம் |
| (b) | கார்டுங்லா | 2. | ஜம்மு காஷ்மீர் |
| (c) | நாது லா | 3. | ஹிமாச்சல பிரதேசம் |
| (d) | சிப்கி லா | 4. | அருணாச்சல பிரதேசம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 2 | 4 | 3 | 1 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

65. Which one of the following is not correctly matched?

(A) Hazaribagh - Mica

(B) Jaduguda - Uranium

(C) Hutti - Gold

(D) Zawar - Copper

பின்வருவனவற்றில் எது தவறாக பொருத்தப்பட்டுள்ளது?

(A) ஹசாரிபாக் - மைகா

(B) ஜடுகுடா - யுரேனியம்

(C) ஹட்டி - தங்கம்

(D) ஜாவர் - தாமிரம்

66. The mouth of the volcano is known as

(A) Cone
(B) Pipe
(C) Vent
(D) Focus

எரிமலையின் வாய் என்றழைக்கப்படுவது.

(A) கூம்பு
(B) குழாய்
(C) வெண்ட்
(D) மையம்

67. The first major irrigation work of Ganga Canal in Uttar Pradesh was opened for irrigation in the year

(A) 1852
(B) 1854
(C) 1860
(D) 1871

உத்திரபிரதேசத்தில் உள்ள பேரளவு பாசனத்திட்டமான கங்கை கால்வாய் முதன் முதலில் பாசனத்திற்கு திறந்து விடப்பட்ட ஆண்டு.

(A) 1852
(B) 1854
(C) 1860
(D) 1871

68. The First Planning Commission, in India was set up under the chairmanship of

(A) Pandit Jawaharlal Nehru
(B) Mahatma Gandhi
(C) Indhra Gandhi
(D) Manmohan Singh

இந்தியாவில் முதல் திட்டக்குழு யாருடைய தலைமையில் அமைக்கப்பட்டது?

(A) பண்டிட் ஜவஹர்லால் நேரு
(B) மகாத்மா காந்தி
(C) இந்திரா காந்தி
(D) மன்மோகன் சிங்

69. As part of land reforms in India, the actual abolition of intermediaries first started in

(A) 1947
(B) 1956
(C) 1948
(D) 1950

இந்தியாவில் நிலச் சீர்திருத்த நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, முதன் முதலில் இடைத் தரகர்களை ஒழிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்ட ஆண்டு.

(A) 1947
(B) 1956
(C) 1948
(D) 1950

70. Find the incorrect statement (s) from the following:

(i) Mirzapur, Bangalore and Hubli are the places of pilgrimage

(ii) Allahabad, Benaras and puri are the places of pilgrimage

(iii) Mirzapur, Bangalore and Hubli are the trading centres

(iv) Allahabad, Benaras and Puri are the commercial centres

(A) (ii) and (iii) only (B) (i) and (iii) only

(C) (i) and (iv) only (D) (ii) and (iv) only

பின்வருவனவற்றுள் தவறான கூற்றுகளைக் காண்க :

(i) மிர்சாபூர், பெங்களூர் மற்றும் ஹுப்ளி ஆகியவை புனித ஸ்தலங்களாகும்

(ii) அலகாபாத், பனாரஸ் மற்றும் பூரி ஆகியவை புனித ஸ்தலங்களாகும்

(iii) மிர்சாபூர், பெங்களூர் மற்றும் ஹுப்ளி ஆகியவை வணிக நகரங்களாகும்

(iv) அலகாபாத், பனாரஸ் மற்றும் பூரி ஆகியவை வணிக நகரங்களாகும்

(A) (ii) மற்றும் (iii) மட்டும் (B) (i) மற்றும் (iii) மட்டும்

(C) (i) மற்றும் (iv) மட்டும் (D) (ii) மற்றும் (iv) மட்டும்

71. Which of the following is the problem in the estimation of National Income in India?

(A) Non – Monetary transactions (B) Inflation

(C) Conspicuous consumption (D) Good banking habits

இந்தியாவில் தேசிய வருமானத்தை கணக்கிடும் போது கீழ்க்கண்டவற்றுள் எவை பிரச்சினையாக இருப்பது?

(A) பணமில்லா பரிவர்த்தனைகள் (B) பணவீக்கம்

(C) குறிப்பிடத்தக்க நுகர்வு (D) நல்ல வங்கி பழக்கம் (சேமிப்பு)

72. Which of the following measures humidity?

(A) Hydrometer
(B) Altimeter
(C) Psychrometer
(D) Radiometer

ஈரப்பதத்தினை அளக்க உதவும் கருவி எது?

(A) ஹைட்ரோமீட்டர்
(B) அல்டிமீட்டர்
(C) சைக்ரோமீட்டர்
(D) ரேடியோமீட்டர்

73. Which country hosted the first women only foreign minister conference?

(A) Canada
(B) India
(C) South Africa
(D) Brazil

முதல் பெண் வெளி உறவு மந்திரிகளின் மாநாட்டினை நடத்திய நாடு எது

(A) கனடா
(B) இந்தியா
(C) சவுத் ஆப்பிரிக்கா
(D) பிரேசில்

74. Which state has the highest number of flowering plant in India according to BSI?

(A) Kerala
(B) Maharastra
(C) Tamil Nadu
(D) Meghalaya

BSI அறிக்கையின் படி இந்தியாவின் எந்த மாநிலத்தில் பூக்கும் தாவரங்கள் மிக அதிகமாக காணப்படுகிறது?

(A) கேரளா
(B) மஹாராஷ்ரா
(C) தமிழ்நாடு
(D) மேகலயா

75. Who is the first former prime minister to be the leader of opposition in Lok sabha in later years?

(A) Indira Gandhi
(B) Rajiv Gandhi
(C) Sonia Gandhi
(D) Raghul Gandhi

முதன்முதலில் எந்த முன்னாள் பிரதம மந்திரி, பின்னாளில் லோக்சபாவின் எதிர்கட்சி தலைவராகவும் செயல்பட்டார்?

(A) இந்திரா காந்தி
(B) ராஜீவ் காந்தி
(C) சோனியா காந்தி
(D) ராகுல் காந்தி

76. Who among the following has never been the chairman of the Finance Commission of India?

(A) Pranab Mukherjee
(B) Mahavir Tyagi
(C) C. Rangarajan
(D) Brahmand Reddy

கீழ்க்கண்டவர்களில், எவர் இந்திய நிதி ஆணையத்தின் தலைவராக இருந்ததில்லை?

(A) பிராணாப் முகர்ஜி
(B) மஹாவீர் தியாகி
(C) சி. ரங்கராஜன்
(D) பிரம்மானந் ரெட்டி

77. Name the world's largest artificial Island

(A) Flevo polder
(B) Palm Jebel Ali
(C) Palm Jumeirah
(D) Kansi

உலகிலேயே மிகப் பெரிய செயற்கை தீவின் பெயர் என்ன?

(A) பெலீவோபோல்டர்
(B) பாம் ஜெபல் அலி
(C) பாம் ஜெமைரா
(D) கான்சி

78. Who was the first woman Prime Minister of the world?

(A) Indira Gandhi (B) Golda Meyar

(C) Srimavo Bandara Naike (D) Margret Thatchar

தற்கால உலகத்தின் முதல் பெண் பிரதமர் யார்?

(A) இந்திரா காந்தி (B) கோல்டா மேயர்

(C) சிரிமாவோ பண்டார நாயகே (D) மார்கிரட் தாட்ச்சர்

79. Which two presidents of India used pocket veto?

(A) V.V. Giri and Zail singh

(B) Abdul Kalam and pratiba patil

(C) Dr. Rajendra prasad and R. Venkatraman

(D) Sankar Dayal Sharma and Pranab Mukherjee

எந்த இரு ஜனாதிபதிகள் பாக்கெட் வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தினார்கள்

(A) வி.வி. கிரி மற்றும் ஜெயில் சிங்

(B) அப்துல் கலாம் மற்றும் பிரதிபா பாட்டேல்

(C) டாக்டர் ராஜேந்திர பிரசாத் மற்றும் R. வெங்கட்ராமன்

(D) சங்கர் தயாள் சர்மா மற்றும் பிரணாப் முகர்ஜி

80. Pick the odd one out

The principal languages in Sikkim are

(A) Lepcha (B) Khasi

(C) Bhutia (D) Nepali

தவறானதை நீக்கு

சிக்கிம் மாநிலத்தில் பேசப்படும் முதன்மையான மொழிகள்

(A) லெப்சா (B) காசி

(C) பூட்டியா (D) நேபாளி

81. Pick the odd one out

Who were the famous rulers of Jammu Kashmir?

(A) Zain-ul-Abedin
(B) Lalitaditya
(C) Kanishka
(D) Ahmed Shah Abdali

தவறானதை நீக்கு

ஜம்மு காஷ்மீரை ஆண்ட பிரபலமான மன்னர்கள் யார்?

(A) ஜயின் உல் அபிடின்
(B) லலிதாத்யா
(C) கனிஷ்கர்
(D) அகமது ஷா அப்தலி

82. Arrange the following in a logical order.

1. Birth
2. Death
3. Funeral
4. Marriage
5. Education

(A) 1, 3, 4, 5, 2
(B) 1, 5, 4, 2, 3
(C) 2, 3, 4, 5, 1
(D) 4, 5, 3, 1, 2

ஒழுங்குபடுத்துக கீழ்காணும் தொடரில்

1. பிறப்பு
2. இறப்பு
3. இறுதி சடங்கு
4. திருமணம்
5. கல்வி

(A) 1, 3, 4, 5, 2
(B) 1, 5, 4, 2, 3
(C) 2, 3, 4, 5, 1
(D) 4, 5, 3, 1, 2

83. If two cylinders of equal volumes have their heights in the ratio 2:3, then the ratio of their radii is

(A) $\sqrt{6}:\sqrt{3}$ (B) $\sqrt{5}:\sqrt{3}$

(C) $2:3$ (D) $\sqrt{3}:\sqrt{2}$

ஒரே கன அளவைக் கொண்ட இரு உருளைகளின் உயரங்களின் விகிதம் 2:3 எனில் அவற்றின் ஆரங்களின் விகிதமானது

(A) $\sqrt{6}:\sqrt{3}$ (B) $\sqrt{5}:\sqrt{3}$

(C) $2:3$ (D) $\sqrt{3}:\sqrt{2}$

84. The ratio of length and breadth of a rectangle is 3:2 respectively. The respective ratio of its perimeter and area is 5:9. What is the breadth of the rectangle in metres?

(A) 6 m (B) 8 m

(C) 9 m (D) 13 m

ஒரு செவ்வகத்தின் நீளம் மற்றும் அகலத்தின் விகிதம் முறையே 3:2. அச்செவ்வகத்தின் சுற்றளவு மற்றும் பரப்பளவின் விகிதம் முறையே 5:9. எனில் செவ்வகத்தின் அகலத்தை மீட்டரில் காண்க.

(A) 6 மீட்டர் (B) 8 மீட்டர்

(C) 9 மீட்டர் (D) 13 மீட்டர்

85. Simplify $8988 \div 8 \div 4$

(A) 4494 (B) 561.75

(C) 2247 (D) 280.875

சுருக்குக $8988 \div 8 \div 4$.

(A) 4494 (B) 561.75

(C) 2247 (D) 280.875

86. If $A:B=3:4$ and $B:C=8:9$. Then find $A:C$.

(A) 1:3 (B) 3:2

(C) 2:3 (D) 1:2

$A:B=3:4$ மற்றும் $B:C=8:9$ எனில் $A:C$ ஐ காண்.

(A) 1:3 (B) 3:2

(C) 2:3 (D) 1:2

87. A sum of Rs.12,000 deposited at compound interest becomes double after 5 years. After 20 years it will become

(A) Rs.1,20,000 (B) Rs.1,92,000

(C) Rs.1,24,000 (D) Rs.96,000

ரூ.12,000 கூட்டு வட்டியில் 5 ஆண்டுகளுக்கு இரு மடங்காகிறது. மேலும் 20 ஆண்டுகள் கழித்து எவ்வளவு கிடைக்கும்.

(A) ரூ.1,20,000 (B) ரூ.1,92,000

(C) ரூ.1,24,000 (D) ரூ.96,000

88. A can do a piece of work in 10 days ; B in 15 days. They work for 5 days. The rest of the work was finished by C in 2 days. If they get Rs.5,000 for the whole work, the daily wages of B and C are

(A) Rs.150 (B) Rs. 225

(C) Rs. 250 (D) Rs. 300

ஓர் வேலையின் ஒரு பகுதியை A என்பவர் 10 நாட்களிலும் B என்பவர் 15 நாட்களிலும் செய்வர். இருவரும் 5 நாட்கள் வேலை செய்தனர். மீதி வேலையை C என்பவர் 2 நாட்களில் செய்து முடித்தார். மொத்த வேலைக்குரிய கூலி ரூ. 5,000 எனில் B மற்றும் C-யின் தினக்கூலி

(A) ரூ. 150 (B) ரூ. 225

(C) ரூ. 250 (D) ரூ. 300

89. If $\frac{x}{5} = \frac{y}{8}$ then find $x+5 : y+8$

(A) 3:5 (B) 13:8

(C) 8:5 (D) 5:8

$\frac{x}{5} = \frac{y}{8}$ எனில் $x+5 : y+8$ காண்

(A) 3:5 (B) 13:8

(C) 8:5 (D) 5:8

90. 5 out of 2250 parts of earth is sulphur. What is the percentage of sulphur in earth?

(A) 11/50 (B) 2/9

(C) 1/45 (D) 2/45

பூமியின், 2250 பாகத்தில் 5 பாகம் சல்பர் உள்ளது. எனில் பூமியில் எத்தனை சதவீதம் சல்பர் உள்ளது?

(A) 11/50 (B) 2/9

(C) 1/45 (D) 2/45

91. Find the volume of a cube whose side 5 cm

(A) 100 $cm^3$ (B) 110 $cm^3$

(C) 125 $cm^3$ (D) 105 $cm^3$

5 செ.மீ பக்க அளவு கொண்ட கனச் சதுரத்தின் கன அளவு காண்

(A) 100 க. செ.மீ (B) 110 க. செ.மீ

(C) 125 க. செ.மீ (D) 105 க. செ.மீ

92. The average height of 10 students in a class was calculated as 166 cm. On verification it was found that one reading was wrongly recorded as 160 cm, instead of 150 cm. Find the correct mean height

(A) 165 cm (B) 160 cm
(C) 155 cm (D) 170 cm

ஒரு வகுப்பில் உள்ள 10 மாணவர்களின் சராசரி உயரம் 166 செ.மீ, எனக் கணக்கிடப்பட்டது. தகவல்களைச் சரிபார்க்கும் போது ஒரு மதிப்பு 150 செ.மீ க்கு பதிலாக 160 செ.மீ என குறிப்பிடப்பபட்டது கண்டுபிடிக்கப்பட்டது எனில் சரியான சராசரி உயரம் காண்

(A) 165 செ.மீ, (B) 160 செ.மீ,
(C) 155 செ.மீ, (D) 170 செ.மீ,

93. The Last day of a century cannot be

(A) Monday (B) Tuesday
(C) Wednesday (D) Friday

ஒரு நூற்றாண்டின் கடைசி நாள், எந்தக் கிழமையாக இருக்காது

(A) திங்கள் (B) செவ்வாய்
(C) புதன் (D) வெள்ளி

94. A man completes 30 Km of a journey at 6 Km/hr and the remaining 40 Km in 5 hours. His average speed for the whole journey is

(A) $6\frac{4}{11}$ Km/hr (B) 7 Km/hr
(C) $7\frac{1}{2}$ Km/hr (D) 8 Km/hr

ஒருவர் 30 கி.மீ. தூரத்தை மணிக்கு 6 கி.மீ வேகத்தில் கடக்கிறார் மற்றும் மீதமுள்ள 40 கி.மீ தூரத்தை 5 மணி நேரத்தில் கடக்கிறார். எனில் அவருடைய மொத்த பயணத்திற்கான சராசரி வேகம் என்ன?

(A) $6\frac{4}{11}$ கி.மீ/மணி (B) 7 கி.மீ/மணி
(C) $7\frac{1}{2}$ கி.மீ/மணி (D) 8 கி.மீ/மணி

95. Recommendations of Sarkaria Commission are related to

(A) Inter–State council

(B) Centre–State relations

(C) Interstate water disputes

(D) North– Eastern council

சர்க்காரிய குழுவின் பரிந்துரை எதனோடு தொடர்புடையது?

(A) மாநிலங்களுக்கிடையேயான குழு

(B) மத்திய – மாநில உறவுகள்

(C) மாநிலங்களுக்கிடையேயான தண்ணீர் பிரச்சனை

(D) வடகிழக்கு குழு

96. Who is the chairman of the 14th Finance Commission?

(A) K.C. Pant

(B) A.M.Khusro

(C) Y.V. Reddy

(D) A.K. Chanda

14-வது நிதிக்குழுவின் தலைவர் யார்?

(A) கே.சி. பந்த்

(B) ஏ.எம் குஸ்ரூ

(C) ஒய்.வி. ரெட்டி

(D) ஏ. கே. சந்தா

97. The Comptroller and Auditor general of India is an agent of the

(A) Government
(B) The president of India
(C) The public Accounts Committee
(D) The Union Parliament

இந்திய தலைமை கணக்கு மற்றும் தணிக்கையாளர் முகவராக செயல்படுவது

(A) அரசாங்கம்
(B) இந்திய ஜனாதிபதி
(C) பொது கணக்கு குழு
(D) மத்திய பாராளுமன்றம்

98. The whistle blowers Act (2011) received the presidential Assent on

(A) 13th December, 2011
(B) 27th December, 2012
(C) 21st February, 2014
(D) 9th May, 2014

உண்மையை வெளிக்கொணர்வோர் பாதுகாப்புச் சட்டம் (2011) குடியரசுத்தலைவரின் ஒப்புதலைப் பெற்ற நாள்

(A) 13 டிசம்பர், 2011
(B) 27 டிசம்பர், 2012
(C) 21 பிப்ரவரி, 2014
(D) 9 மே, 2014

99. Jammu and Kashmir has a constitution framed by

(A) The constituent Assembly
(B) State Legislature
(C) Constituent Assembly set up by Parliament
(D) Constituent Assembly set up by The State

ஜம்மு–காஷ்மீர் அரசியலமைப்பை உருவாக்கியது

(A) அரசியலமைப்பு நிர்ணய சபை
(B) மாநில சட்டமன்றம்
(C) பாராளுமன்றம் நிறுவிய அரசியலமைப்பு நிர்ணயசபை
(D) அரசு நிறுவிய அரசியலமைப்பு நிர்ணய சபை

100. When is the International Human Rights Day celebrated?

(A) 1st December
(B) 5th December
(C) 8th December
(D) 10th December

சர்வதேச மனித உரிமைகள் தினம் எப்பொழுது கொண்டாடப்படுகிறது?

(A) டிசம்பர் 1
(B) டிசம்பர் 5
(C) டிசம்பர் 8
(D) டிசம்பர் 10